பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
08 07 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையை கடைபிடிக்க வேண்டுமென்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.
- பிரதமர் திரு நரேந்திர மோடி, ரஷ்யா – ஆஸ்திரியா நாடுகளுக்கு மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புறப்பட்டுச் சென்றார்.
- ஜார்க்கண்ட் முதலமைச்சராக மீண்டும் பதவியேற்றுள்ள திரு ஹேமந்த் சோரன் அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு மீதான விவாதம் தற்போது அம்மாநில சட்டப்பேரவையில் நடைபெற்று வருகிறது.
- தமிழகத்தில் விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.
- மும்பை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக அங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையை கடைபிடிக்க வேண்டுமென்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

நான்கு நாள் பயணமாக ஒடிஸா சென்றுள்ள அவர், பூரி கடற்கரையை இன்று பார்வையிட்டார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், மனிதர்கள் இயற்கையை மாசுப்படுத்தக்கூடாது என்றும், அதற்கான விளைவுகளை பருவநிலை மாற்றங்கள் மூலமாக நாம் எதிர்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் 70 சதவீத பகுதி கடல் நீரால் சூழப்பட்டுள்ளதாகவும், அதனை பாதுகாப்பதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டுமென்றும் திருமதி திரௌபதி முர்மு அறிவுறுத்தியுள்ளார்.

ஒடிஸாவில் புகழ்பெற்ற உதயகிரி குகைகளை குடியரசுத் தலைவர் இன்று பார்வையிடுகிறார்.

உத்கல் கலாச்சார பல்கலைக்கழகம் மற்றும் நுண்கலைக் கல்லூரி மாணவர்களுடனும் திருமதி திரௌபதி முர்மு இன்று கலந்துரையாடுகிறார்.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திர மோடி, ரஷ்யா – ஆஸ்திரியா நாடுகளுக்கு மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

தமது பயணத்தின் முதற்கட்டமாக ரஷ்ய தலைநகர் மாஸ்கோ செல்லும் பிரதமர், அங்கு நடைபெறவுள்ள இந்தியா – ரஷ்யா 22-வது ஆண்டு உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

ரஷ்யா புறப்படுவதற்கு முன் பிரதமர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்தியா – ரஷ்யா இடையே கடந்த பத்து ஆண்டுகளில் பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு வலுப்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு, வர்த்தகம், எரிசக்தி, கல்வி, கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினுடன் விவாதிக்க உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சர்வதேச மற்றும் மண்டல அளவில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாகவும் இருவரும் விவாதிக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவில் அமைதி நிலவ இந்தியா துணை நிற்கும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

41 ஆண்டுகளுக்குப் பின் இந்திய பிரதமர் ஒருவர் ஆஸ்திரியா பயணம் மேற்கொள்வதை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் ஜனநாயகம் மற்றும் பன்மைத்துவத்தில் ஒரே மாதிரியான கொள்கைகளை பகிர்ந்து வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பயணத்தின்போது ரஷ்யா மற்றும் ஆஸ்திரியாவில் வசிக்கும் இந்தியர்களை நேரில் சந்தித்து அவர்களுடன் தாம் கலந்துரையாட உள்ளதாகவும் திரு நரேந்திரமோடி அந்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

திரு நரேந்திர மோடியை வரவேற்று, ரஷ்ய அதிபர் இன்று விருந்தளிக்கிறார்.

க்ரம்ளின் வளாகத்தில் உள்ள போர் வீரர்கள் நினைவிடத்தில் மரியாதை செலுத்தவுள்ள பிரதமர், மாஸ்கோவில் உள்ள கண்காட்சிக் கூடத்திற்கும் செல்லவுள்ளார்.

[]<<<>>>[]

ஆந்திர மாநில பிஜேபி செயற்குழுக் கூட்டம் இன்று விஜயவாடாவில் நடைபெறுகிறது.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் இதில் பங்கேற்கிறார்.

இக்கூட்டத்தில் அம்மாநில பிஜேபி நிர்வாகிகளும் கலந்து கொள்கின்றனர்.

[]<<<>>>[]

ஜார்க்கண்ட் முதலமைச்சராக மீண்டும் பதவியேற்றுள்ள திரு ஹேமந்த் சோரன் அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு மீதான விவாதம் தற்போது அம்மாநில சட்டப்பேரவையில் நடைபெற்று வருகிறது.

சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டம் இன்று காலை கூடியதும் நமபிக்கை வாக்கெடுப்பு தீர்மானத்தை அம்மாநில முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் தாக்கல் செய்தார்.

இதன் மீதான விவாதத்திற்கு ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், விவாதம் நிறைவடைந்ததும் வாக்கெடுப்பு நடத்த.ப்படும் என்றும் சட்டப்பேரவைத் தலைவர் திரு ரவீந்திரநாத் மகதோ தெரிவித்தார்.

81 உறுப்பினர்களைக் கொண்ட ஜார்க்கண்ட் சட்டப்பேரவையில் ஐந்து இடங்கள் காலியாக உள்ளன.

தற்போதைய நிலவரப்படி நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற 39 உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில், திரு ஹேமந்த் சோரன் அரசுக்கு 44 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது.

[]<<<>>>[]

இளநிலை நீட் தேர்வு தொடர்பான மனுக்களை உச்சநீதிமன்றம் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்கிறது.

இந்த தேர்வை மீண்டும் நடத்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தும் 26 மனுக்களை, தலைமை நீதிபதி **D.Y.** சந்திரசூட், நீதிபதிகள் பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் கொண்ட அமர்வு விசாரிக்கவுள்ளது.

நீட் தேர்வு முறைகேடுகள் தொடர்பாக தன்னிச்சையான புலனாய்வு விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்பது உள்ளிட்ட மாணவர்களின் கோரிக்கைகளையும் உச்சநீதிமன்ற அமர்வு விசாரிக்கவுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

அரசியல் கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைவதையடுத்து தொகுதிக்கு சம்பந்தமில்லாதவர்கள் தொகுதியைவிட்டு வெளியேறுமாறு தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சுரேஷ் ) --- 45 செகண்ட்*

விக்கிரவாண்டி தொகுதியில் வாக்குப்பதிவு நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் 13-ஆம் தேதி எண்ணப்படுகின்றன.

**[]<<<>>>[]**

தமிழக நீர்வளத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஏரி குளம், கண்மாய்களிலிருந்து விவசாய மற்றும் மண்பாண்டம் பயன்பாட்டிற்கு கட்டணமின்றி களிமண், வண்டல்மண் எடுப்பதற்கான அனுமதியை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

இந்த திட்டத்தின் கீழ் விண்ணப்பித்தவர்களுக்கு அனுமதி ஆணைகளை அவர் இன்று வழங்கியதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது

**[]<<<>>>[]**

சென்னை மாநகர புதிய காவல்துறை ஆணையராக திரு அருண் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை அந்த பதவியில் இருந்த திரு சந்தீப் ராய் ரத்தோர் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

கர்நாடகாவின் காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக தமிழகத்தின் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மழை காரணமாக அங்குள்ள அணைகளிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் இன்று காலை நிலவரப்படி தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு வினாடிக்கு ஐயாயிரம் கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - தண்டபாணி ) -30--- செகண்ட்*

**[]<<<>>>[]**

அமர்நாத் யாத்திரை மேற்கொள்ளும் யாத்திரிகர்களுக்காக ஜம்மு-கஷ்மீர் சுகாதாரத்துறை குதிரை ஆம்புலன்ஸ் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஜம்மு-கஷ்மீர் சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் முஸ்தாக் அகமது ராத்தர், மருத்துவக் கல்வி செயலாளர் டாக்டர் சையத் ஆபித் ரஷித் ஷா ஆகியோரின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தப்படும் இந்த திட்டம், யாத்திரிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

உடல்நலக் குறைவால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிசிக்சை அளிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள், ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் போன்றவற்றை எடுத்துச் செல்லும் வகையில் இந்த குதிரை ஆம்புலன்ஸ் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

[]<<<>>>[]

நாட்டின் மேற்கு கடலோரப் பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு கனமழை முதல் அதி கனமழை வரை பெய்ய வாய்பபு உள்ளதாகள வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு, கிழக்கு மாநிலங்கள், உத்திரபிரதேசத்தின் பல பகுதிகளில் இதே காலத்தில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அது கூறியுள்ளது.

அஸ்ஸாம் மற்றும் மேகாலயாவில் வரும் 10 மற்றும் 11-ஆம் தேதிகளில் மிதமான மழை பெய்யக்வடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே மகாராஷ்டிரா மாநிலத்தின் பல பகுதிகளில் கனமழை பெய்துள்ளது.

இன்று அதிகாலை ஒரு மணி முதல் ஏழு மணி வரை மும்பையின் பல்வேறு பகுதிகளில் 30 சென்டி மீட்டருக்கும் கூடுதலாக மழை பெய்துள்ளது. இதன் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ளதால் அங்கு புறநகர் ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதுடன், பேருந்து போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக அரசு, தனியார் கல்லூரி மற்றும் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிராவின் மும்பை பால்கர், தானே உள்ளிட்ட ஆறு மாவட்டங்களுக்கு மிக கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ஜப்பானின் மேற்கு **Ogasawara** தீவுகளில் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவில் ஆறு புள்ளி மூன்றாக பதிவானது.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் திண்டுக்கல் - சேலம் அணிகள் மோதுகின்றன.

சேலத்தில் இப்போட்டி இரவு மணி 7-15-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**